**செய்தி வெளியீடு எண்.933** **நாள்.31.10.2008**

# செய்தி

தமிழக அரசின் வேண்டுக்கோளுக்கிணங்க ஸ்ரீ சத்யசாய் மத்திய அறக்கட்டளையினால் தமிழ்நாடு - ஆந்திர எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரையிலான கிருஷ்ணா (கண்டலேறு – பூண்டி) கால்வாயில் பாதிப்படைந்த பகுதிகளில் மட்டும் புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டன. இதில் முக்கியமாக கல்வாயின் 13500மீ முதல் 21500மீ வரையிலான பகுதிகளில் மண்ணின் தன்மை மிகவும் மோசமான கோண்டுவானா களிமண்ணாக இருந்ததால், இந்தப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் அதிகப்படியான பாதிப்புகள் ஏற்பட்டன.

இந்த மிகவும் பாதிப்படைந்த பகுதிகளில் தண்ணீர் செல்லும் மட்டத்திற்குள் உள்ள இடங்களில் கான்கிரீட் தடுப்புச் சுவர், கருங்கல் சுவர் மற்றும் கான்கிரீட் லைனிங் அமைத்து சீரமைக்கப்பட்டன. மேலும், பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத பகுதிகளில் நீர்மட்டத்திற்கு மேல் உள்ள கரைப்பகுதியில் அதிகப்படியாக இருந்த மண்மேட்டினை அகற்றி கருங்கற்கள் பரவும் பணியும் (Revetment) மேற்கொள்ளப்பட்டன.

தற்பொழுது செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிப்படைந்துள்ள பகுதிகளின் சாய்வுத்தள சுவர்களில் எவ்விதமான புனரமைப்புப் பணிகளும் செய்யப்படவில்லை. பாதிப்படைந்த பகுதிகளில் மண்ணின் தன்மை களிமண்ணாக இருப்பதால், மழைக்காலங்களில் கரையின் அருகாமையில் உள்ள நிலங்களின் வழியாக ஊடுறுவும் தண்ணீரினால் தரைமட்டத்தின் கீழ் உள்ள களிமண் அடுக்கு விரிவடைந்து இதன் காரணமாக கரைப்பகுதியின் மேற்பரப்பில் சரிவு ஏற்பட்டு பக்கச் சாய்வு சுவரும் பாதிப்படைந்துள்ளது. இதனால், கால்வாயின் தண்ணீர் வரத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. பாதிக்கப்பட்ட சாய்வுச் சுவர் மற்றும் மேற்பரப்பு பகுதிகள் ஆந்திராவிலிருந்து தேவையான அளவு தண்ணீர் பெற்று முடிந்தவுடன் சரி செய்யப்படும்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.